

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி வேலூர் ஒன்றியம் புலிமேடு ஊராட்சி கிராமத்தில் புதிய நியாயவிலைக் கடையை மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. திறந்து முதல் வைத்தார். இதில் ஒன்றிய குழு பெருந்தலைவர் அமுதா ஞானசேகரன், துணை தலைவர் மகேஷ்வரிகாசி, ஒன்றிய செயலாளர் சி.எல்.ஞான சேகரன், துணை செயலாளர் காசி, மாவட்ட கவுன்சிலர் தா.பாபு, ஒன்றிய கவுன்சிலர் ஈட்டி குமார், மாவட்டப் பிரதிநிதி பாஸ்கர், ஊராட்சி மன்ற தலைவர் விஜயலஷ்மி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த போதை இல்லாத தமிழ்நாடு, போதை பழக்கத்திற்கு எதிரான நிகழ்ச்சியில் மேல்விஷாரம் அப்துல் ஹக்கீம் கல்லூரியில் மாணவர்களுடன் இராணிப் பேட்டை மாவட்ட ஆட்சியர் சந்திரகலா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்எல்ஏ,, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரன் ஸ்ருதி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, ஒன்றிய குழு தலைவர்கள் புவனேஸ்வரி சத்தியநாதன், அசோக், நகராட்சி தலைவர்கள் முகமது அமீன், தேவி பென்ஸ் பாண்டியன், நகராட்சி ஆணையர் பழனி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## விலைவாசி உயர்வால் 350 சதுர அடியில் வீடு கட்டுவதற்கு

# ரூ.3.5 லட்சமாவது நிதியை ஒன்றிய அரசு உயர்த்தி தர வேண்டும்!

## “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, ஆக. 14 -

விலைவாசி உயர்வால், 350 சதுர அடியில் வீடு கட்டுவதற்கு ரூ.3.5 லட்சமாவது நிதியை ஒன்றிய அரசு உயர்த்தி தர வேண்டும் என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.




இது குறித்து 13.08.2024 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

இந்தியாவில் சொந்த வீடு என்பது பலருக்கு பெரும் கனவாக இருந்து வருகிறது. பலர் வாடகை சுமையை தாங்க முடியாமல் திணறி வருகின்றனர். அவர்களுக்கு வீடு கட்ட அரசு நிதியுதவி அளித்து வருகிறது. அனைவருக்கும் சொந்த வீடு கட்ட உதவும் வகையில் 2015ம் ஆண்டு பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா (PMAY) திட்டத்தை ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியது. பிரதமர் ஆவாஸ் யோஜனா திட்டத்தை இரண்டு பகுதிகளாக பிரி த்துள்ளனர். பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா அர்பன். இத்திட்டம் நகர்ப்புறங்களில் வாழும் ஏழை மக்களுக்கானது. நாடு முழுவதும் 4,000க்கும் மேற்பட்ட நகரங்களில் செயல்படுத்தப்படுகிறது. இந்த ஆண்டு டிசம்பர் மாதத்துக்குள், நகர்ப்புறங்களில் இத்திட்டத்தை முழு மையாக செயல்படுத்த ஒன்றிய அரசு இலக்கு நிர்ண யித்துள்ளது.

பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா கிராமின் திட்டம் மற்றொன்று. நாட்டின் கிராமப்புறங்களில் வசிக்கும் அனைத்து குடிமக்களுக்கும் வீடுகளை வழங்குவதே நோக்கமாகும். இத்திட்டம் செலவுபகிர்வு மாதிரியை அடிப்படையாக கொண்டது. அதாவது பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான செலவை ஒன்றிய அரசும் அந்தந்த மாநில அரசுகளும் கூட்டாக ஏற்கின்றன. செலவு பகிர்வு விகிதத்தை பார்த்தால், சமவெளி பகுதிகளில் ஒன்றிய அரசு 60% செலவையும், மாநில அரசு 40% செலவையும் ஏற்கிறது. இந்த திட்டத்தின் கீழ் பயனாளிகள் வீட்டுக் கடனில் சலுகைகளை பெறலாம். இந்த உதவி ‘கிரெடிட் லிங்க்டு மானியத் திட்டம் (சிஎல்எஸ்எஸ்)’ மூலம் வழங்கப்படுகிறது.

கடந்த காலங்களில் பட்ஜெட்டில் ஒன்றிய அரசு நிதி, குறைவாக ஒதுக்கீடு செய்யப்பட்டதால் ஒன்றிய அரசின் இலக்கை எட்ட முடியவில்லை. நகராட்சி, பேரூராட்சியில் வசிப்பவர்கள் வீடு வேண்டி ஆன்லைனில் விண்ணப்பித்து விட்டு காத்து கொண்டு இருக்கிறார்கள். பேரூராட்சியில் (மக்கள் தொகைக்கு ஏற்ப) ஆண்டுக்கு 20 வீடுகள் ஒதுக்கப்படுகிறது. இது மிக மிக குறைவாகும். மேலும் 2015ம் ஆண்டில் கணக்கின்படி 350 சதுரஅடியில் வீடு கட்ட ஒன்றிய அரசு ரூ.2.10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்தது. 9 ஆண்டுகளுக்கு பிறகும் விலைவாசி உயர்வில் அதே நிதியில் 350 சதுரஅடியில் வீடு கட்டுவது எப்படி சாத்தியம் ஆகும். இதனால் ஏழை மக்கள், இந்த திட்டத்தால் பயனடைய முன்வரவில்லை. நடுத்தர மக்கள் தான், தங்களது சொந்த நிதியை பயன்படுத்தி இந்த திட்டத்தின் மூலம் பயன் அடைகிறார்கள். குடிசை வீடு இல்லாத நிலையை அடைய வேண்டும் என்றால் நிதியை கூடுதலாக ஒதுக்கீடு செய்து வழங்க வேண்டும். இதனால் ஏழை மக்களின் வறுமையை பயன்படுத்தி 2016 முதல் 2020ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் வீடு கட்டியது போன்று கணக்கு காட்டிவிட்டு அவர்களுக்கு சிறு தொகையை வழங்கிவிட்டு முறைகேட்டில் ஈடுபட்டதாக 50 அதிகாரிகள் மீது லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

2024 ஒன்றிய பட்ஜெட்டில், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் PMAY திட்ட த்துக்கான ஒதுக்கீட்டை 66% அதிகரித்து ரூ.79,000 கோடியாக அறிவித்தார். பிரதமர் ஆவாஸ் யோஜனா தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருவதாக பட்ஜெட்டில் கூறியுள்ளார். ‘மூன்று கோடி வீடுகள்’ என்ற இலக்கை எட்டியுள்ளோம். குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் அடுத்த 5 ஆண்டுகளில் மேலும் 2 கோடி வீடுகளை கட்ட முடிவு செய்துள்ளோம் என கூறியுள்ளார். வீடுகள் எண்ணிக்கை அதிகரித்தாலும் நிதியை அதிகரித்தால் தான் உண்மையான ஏழை மக்கள் பயனடைவார்கள். விலைவாசி உயர்வால் 350 சதுர அடியில் வீடு கட்டுவதற்கு குறைந்தபட்சம் ரூ.3.5 லட்சமாவது நிதியை ஒன்றிய அரசு உயர்த்தி தர வேண்டும் என்பது தான் ஏழை மக்களின் வேண்டுகோளாக உள்ளது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வேதாரண்யம் ஒன்றியம்

# ஆயக்கரன்புலம்3ம் ஊராட்சியில் புதிய மாணவியர் விடுதி!

## அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்! என்.கௌதமன் பங்கேற்பு!

நாகை, ஆக.14 -

நாகை மாவட்டம் வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம் ஆயக்கரன் புலம்3 ஊரட்சியில் ஆதிதிராவிடர் நலத்துறை மாணவியர் விடுதி திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ் தலைமை தாங்கினார். நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என். கௌதமன் முன்னிலை வகித்தார். ஆயக்காரனம்புலம்3ல் ஆதிதிராவிடர் நலத்துறை மாணவியர் விடுதியினை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்து பேசுகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்அதிகமான மாணவியர் விடுதியை திறக்கப்பட்டு பெண்கள் படிப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்கி தந்துள்ளார். அரசு பள்ளியிலேயே படித்து வருகின்றபோது 7.5 சதவீதம் இட ஒதுக்கீடு தரப்படுகிறது. உயர்கல்வி படிப்பதற்கு மாதம் ரூ. 1,000 கிடைக்க வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

எனவே அரசு பள்ளிகள் தங்களின் பெருமை என சொல்வி கொள்ளும் அளவிற்கு பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அரசு பள்ளிகளில் சேர்க்கும் நிலை உருவாக்கி தரப்பட்டுள்ளது. தனியார் பள்ளிகளில் உள்ள அனைத்து வசதிகளும் அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு எந்தவித கட்டணமின்றி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி தந்துள்ளார். இவ்வாய்பை பயன்படுத்தி அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்கள் வாழ்வை மென்மேலும் வளர எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் வேதாரண்யம் வட்டம் வெட்டியக்காடு அரசு ஆதிதிராவிடர் நல மணவியர் விடுதியினை வேதாரண்யம் ஊரட்சி ஒன்றியம் ஆயக்கரன்புலம் 3ம் ஊராட்சியில் ஆதிதிரவிடர் நலத்துறை மாணவியர் விடுதியாக மாற்றிமைத்து ஆணையிடப்பட்டுள்ளது. இந்த விடுதியில் 60 மாணவியர்கள் தங்கி படித்து வருகின்றனர். மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலக இளைநிலை பொறியாளர் மூலம் மாணவிகள் தங்கி கல்வி பயின்றிட அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்பாடுத்தப்பட்டுள்ளது. வேதாரண்யம் ஒன்றியம் ஆயக்கரன் புலம்3ம் ஊராட்சியில் ஒரு சிறப்பான நிகழ்ச்சி நடைபெற்று கொண்டிருக்கிறது. காரணம் எழுத்தறிவித்தல் என்பது ஒரு சிறப்பான செயல். படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்கு தங்குமிடம் தருதல் என்பது அதைவிட சிறப்பானதாகும். அதை அரசாங்கம் செய்துவருவதோடு மட்டுமல்லாமல்அதை செய்து தந்து அரசுக்கு உறுதுணையாக இருக் கக்கூடியவர்கள் பாராட்டுக்குரியவர்கள் ஆவார்.

அப்படி பாராட்டுக்குரியவர் தான் மருதுவர் சுந்தராஜன். மாணவிகள் தங்கி கல்வி பயில்வ தற்கு அயக்கரன்புலத்தை சோந்த மருத்துவர் சுந்தர் ராஜ என்பவர் தனது இல்லத்தினை வாடகையின்றி தங்கி பயில்வதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார். கொடுக்கின்ற மனம் கொடுத்துகொண்டே தான் இதுக்கும் என்பதற்கு இவர் உதாரணம். அவருக்கு நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேசினார்.

நிகழ்ச்சியில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் வேதாரண்யம் மேற்கு உதயம் வே.முருகையன், வேதாரண்யம் கிழக்கு என்.சதாசிவம், தலைஞாயிறு மகா.குமார், வேதாரண்யம் நகர் மன்ற தலைவரும், நகரக் கழகச் செயலாளர் மா.மீ.புகழேந்தி, மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர் எஸ்.வி.டி.அருள், தகவல் தொழில் நுட்ப அணி நாகை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ.பாரி பாலன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர். துரைராஜ், மாவட்ட சுற்று சூழல் அணி அமைப்பாளர் சத்தியமூர்த்தி, மாவட்ட ஆதிதிரவிடர் நலக்குழு தலைவர் முருகேசன், மாவட்ட வழக்கறிஞர் அணி மா.மீ.அன்பரசன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் செந்தாமரை, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ஆர். பாபு, மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் டி.எஸ்.பாலு, ஒன்றிய அவைத்தலைவர் சீனி வாசன், ஒன்றிய குழு உறுப்பினர் கண்ணகிமுருகேசன், கிளைச் செயலாளர்கள் தமிழ்செல்வன், செந்தில், வி.கோவிந்தராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## விருதுநகர் மாவட்டத்தில்

# டிஜிட்டல் சேவைத் துறை மூலம் இ–சேவை மையம்!

## மாவட்ட ஆட்சியர் தகவல்!

விருதுநகர், ஆக. 14 -

விருதுநகர் மாவட்டம் மதி சிறகுகள் தொழில் மையத்தின் மூலமாக தகவல் தொழில் நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைத் துறை மூலம் இசேவை மையம் 01.08.2024 முதல் செயல்பட துவங்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தெரிவித்துள்ளார்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் ஊராட்சிகளில் தொழில் மேம்பாட்டினை வலுப்படுத்தவும், தொழில் முனைவோருக்கும், தொழில் நிறுவனங்களுக்கும் வணிக மேம்பாட்டு உதவி சேவைகளை வழங்குவதற்கு மதி சிறகுகள் தொழில் மையம் துவங்கப்பட்டு இயங்கி வருகிறது.

மதி சிறகுகள் தொழில் மையம் மூலமாக தொழில் திட்டம் தயாரித்தல், தொழில்நுட்ப விபரங்கள், திறன் பயிற்சி குறித்த விவரங்கள், சந்தை பற்றிய தகவல்கள், நிதி இணைப்புகள், பிறதுறை இணைப்புகள், வணிக இணைப்பு கூட்டம், வழிகாட்டுநர்கள், துறை ரீதியான ஆலோசனைகள் ஆகிய சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது மதி சிறகுகள் தொழில் மையத்தின் மூலமாக தகவல் தொழில் நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைத் துறை மூலம் இ சேவை மையம் 01.08.2024 முதல் செயல்பட துவங்கியுள்ளது.

இதன் மூலம் மக்களுக்கு தேவையான சேவைகள் அனைத்தும் அரசு நிர்ணயித்துள்ள குறைந்த கட்டணத்தில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் புதிதாக தொழில் தொடங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு தொழில் தொடங்குவதில் ஏற்படும் இடையூறுகளையும், தடைகளையும் கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்வதற்கான சேவைகளும், அனைத்து துறை ரீதியான கடன் நிதி பெறுவதற்கு தொழில் திட்டம் தயாரித்தல், சட்டபூர்வ ஆவண பதிவுகள் தொழிலாளர் நல வாரிய அட்டை, வருவாய் நிர்வாகம் சார்ந்த ஆவணங்கள் (அடங்கல், ஜாதி சான்றிதழ், வருமான சான்றிதழ்,இருப்பிடசான்றிதழ்...,) மற்றும் அனைத்து துறை சார்ந்த ஆவணங்களும் பெற்று தரப்படும்.

மேலும் கடன் பெற்றவர்களுக்கான வணிக இணைப்பு கூட்டம் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது புதன்கிழமை அன்று மதி சிறகுகள் தொழில் மையத்தில் வைத்து நடத்தப்பட்டு வருகிறது. இச்சேவை மையத்தை அனைத்து வட்டாரங்களைச் சார்ந்த நபர்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

## ரிஷிவந்தியம் அரசு கலை, அறிவியல் கல்லூரியில்

# ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டம் தொடக்க விழா!

## வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. – மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் பங்கேற்பு!

ரிஷிவந்தியம் ஆக.14 -

கள்ளக்குறிச்சி மாவட்டம்,வாணாபுரம் வட்டம் ரிஷிவந்தியம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்ப் புதல்வன் திட்டம் தொடக்க விழா மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமையில் நடை பெற்றது,இந்த விழாவில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார்,மாவட்ட சமூகநல அலுவலர் தீபிகா வரவேற்புரை ஆற்றினார்,விழாவில் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன் பேசுகையில் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் படி 6 முதல் 12ம் வகுப்பு வரை அரசு அல்லது அரசு உதவி பெறும் பள்ளியில் தமிழ் வழியில் பயின்று,

மேற்படிப்புக்காக கல்லூரியில் சேரும் மாணவர்களுக்கு பயன்பெறும் வகையில் மாதந்தோறும் ரூ.1,000 உதவித்தொகை வழங்கப்படும் என தமிழக முதல்வர்,கழக தலைவர், சமூக நீதி காவலர்,திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருந்தார்,அதன் அடிப்படையில் இன்றைய தினம் கோவையில் இந்த திட்டத்தினை தமிழக முதல்வர் தொடங்கி வைத்தார், இந்த திட்டமானது ஒரு முத்தான திட்டம் ஏனென்றால் கிராமப்புற பகுதிகளில் வசிக்கும் விவசாய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களும், நடுத்தர வர்க்கத்தை சேர்ந்த மாணவர்களும், தினசரி கூலி தொழிலாளர்கள் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களும் அவர்கள் வாழ்க்கையில் அடுத்த கட்ட நகர்வுக்கு செல்லும் விதமாக அவர்களுக்கு பயனுள்ளதாகவும் கண்டிப்பாக இருக்கும் என்று பேசினார்,மேலும் இலவச கட்டாய கல்வி திட்டத்தின் கீழ் 6 முதல் 8ம் வகுப்பு வரை தனியார் பள்ளியில் பயின்று 9 முதல் 12ம் வகுப்பு வரை அரசு பள்ளியில் பயின்ற மாணவர்களும் இத்திட்டத்தில் பயனடையலாம், தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் 33 கல்லூரிகளில் பயிலும் 3,515 மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்பட உள்ளது என்றார்,இதனை தொடர்ந்து மாணவர்களுக்கு தமிழ்ப் புதல்வன் திட்ட வங்கி பரிவர்த்தனை அட்டைகள் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன் மற்றும் மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் வழங்கினார்கள்.

இவ்விழாவில் ஒன்றிய கழக செயலாளர்கள் பெருமாள், பாரதிதாசன், துரை முருகன், அசோக்குமார், ரிஷிவந்தியம் ஒன்றியக் குழு தலைவர் வடிவுக்கரசி சாமிசுப்பிரமணியன், துணை தலைவர் சென்னம்மாள் அண்ணாதுரை, மணலூர்பேட்டை பேரூராட்சி தலைவர் ரேவதி ஜெய்கணேஷ், வாணாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சந்திரசேகரன்,

நடராஜன், மாவட்ட கவுன்சிலர்கள் ராஜேந்திரன், கோவிந்த ராஜ், அமிர்தம் ராஜேந்திரன், ஒன்றிய கவுன்சிலர் குமார், ஊராட்சி மன்ற தலைவர் வசந்தகுமாரி லிங்கநாதன், பொதுக்குழு உறுப்பினர். ராஜு,கல்லூரி பேராசிரியர்கள் சண்முகம், கணேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர் நிகழ்ச்சியின் முடிவில் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) மணிகண்டன் நன்றி கூறினார்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் 13.08.2024 அன்று காலை 7.00 மணி முதல் 9.00 மணி வரை ஆசாரிபள்ளம் பகுதியில் நாகர்கோவில் மாநகராட்சி மேற்கு மண்டல அலுவலகம் அமையவிருக்கும் இடத்தை மாநகராட்சி அதிகாரிகளுடன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வில் ஆசாரிபள்ளம் பகுதியில் அமைந்துள்ள பேரூராட்சி அலுவலக பழைய கட்டிடத்தில் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொண்டு நாகர்கோவில் மாநகராட்சி மேற்கு மண்டல அலுவலகம் அமைக்கத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார். ஆய்வின் போது நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, உதவி ஆணையர் பாலசுந்தரம், மாநகர் நல அலுவலர் மருத்துவர் ராம்குமார், துணை மேயர் திருமதி. ம.மேரி பிரின்சி லதா, இளநிலை பொறியாளர் திருமதி தேவி, சுகாதார அலுவலர் ராஜா, மண்டலத் தலைவர் பா. செல்வ குமார், மாமன்ற உறுப்பினர்கள் சூ.அமல செல்வன், திருமதி. ச. மோனிகா, மாநகராட்சி அதிகாரிகள், பகுதி செயலாளர் மு. சேக்மீரான் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## தேனி வடக்கு மாவட்டம்

# விவசாயத் தொழிலாளர் அணி பரமசிவம் தாயார் பெருமாயி மறைவு!

## தங்கத் தமிழ்ச் செல்வன் எம்.பி. அஞ்சலி!

தேனி, அக்.14 -



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் தொகுதி விவசாயத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பரமசிவம் அவர்களின் தாயார் பெருமாயி அவர்கள் மறைவெய்தினார். சில்வார்பட்டியில் இறுதிச் சடங்கு நடைபெற்றது.

அன்னாரின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் சில்வார் பட்டிக்கு தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்கத்தமிழ் செல்வன் எம்.பி, சரவணக் குமார் எம்.எல்.ஏ, உயர்நிலைதிட்ட செயல்திட்டக் குழு உறுப்பினர் மூக்கையா, ஒன்றிய செயலாளர் எல்.எம்.பாண்டியன், பெரியகுளம் நகர செயலாளர் முகமது இலியாஸ், நகர மன்ற தலைவர் சுமிதா சிவகுமார், ஒன்றிய குழு தலைவர் தங்கவேல், ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி, கலை இலக்கிய மாவட்ட அமைப்பாளர் செல்வகுமார் ,பேரூர் செயலாளர் தமிழன், மாவட்ட பிரதிநிதி ராஜாராம் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் , கழக முன்னோடிகள் நேரில் சென்று குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறி அன்னாரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தினர்.



சிவகங்கை தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவு தினத்தை முன்னிட்டு தாய் தவழும் மாற்றுத்திறனாளிகள் இல்லத்தில் மதிய உணவினை தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.ஜெயராமன் வழங்கினார்.